முருகப்பெருமான் துணை

**மகான் கணபதிதாசர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.05.2023, வெள்ளிக்கிழமை

1. தவசியே தயவே வடிவான
தருமனே ஆறுமுகப் பெருமான்
அவதார அரங்க மகானே
அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது விடைதிங்கள்
குறைவிலா பஞ்சதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 05ம் நாள், 19.05.2023, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகனுக்கு கணபதிதாசர் யானும்
3. யானும் அரங்கர் மயமாகவே
உலகம் தேறிட உரைப்பேன்
ஞானபலம் அடைந்து நன்கு
ஞானிகளாக மாற்றம் நிகழ
4. நிகழவே கலியுக மக்கள்
நிலமதனில் அரங்கன் வழி
வகைபட ஏற்று வருக
வணங்கி சரவணசோதி ஏற்றி
5. ஏற்றி வழிபாடு செய்திட
எங்கும் சோதி மயமான
ஆற்றல் பெருகி நன்கு
அவரவருள்ளும் அகசோதி
6. அகசோதியுள் அரங்கன் பலம்
அய்க்கியமாகி தெளிவு திடம்
செகத்திற்கு வந்த நோக்கமும்
சேயாய் இனிகருவறை செல்லா நோக்கமும்
7. நோக்கமுமாக நிலை கூடியே
நீதி நெறி குன்றாவாழ்வு
தேக்கம் என்பது கொடையில் இன்றி
தேடித்தேடி தருமம் செய்து

8. செய்துமே முந்தை கருமவினை
செயலிழந்து ஓடும் வண்ணம்
அய்யமற விரட்டி இனிதே
அனைவரும் அரங்கன் ஆசிபட

9. ஆசிபட தேறி இனிதே
அகிலத்தில் ஞானிகளாக
வாசி வசமாகிச் சிறந்து
வாழுகின்ற காலமே வடிவேலனை

10. வேலனை கண்டு திளைப்பர்
வினவிட மற்றவர்க்கும் இந்தவித
காலனை வெல்லும் இன்பத்தை
கந்தனை அடையும் மார்க்கத்தை

11. மார்க்கத்தை கண்டுத் தேறி
மற்றவர்களையும் தேற்றி
பார் எங்கிலும் ஞானத்தலைமையும்
பக்குவமான ஞானஆட்சியும் படைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–